கொல்லி மலையில் மூலிகைத் தோட்டமும், மருத்துவ மனையும் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 44—திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சேலம் மாவட்டம், கொல்லி மலையில் மத்திய அரசு மூலிகை தோட்டமும், மருத்துவ மனை ஒன்றையும் ஏற்படுத்த முன்வந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே : (அ) மத்திய அரசு, சேலம் மாவட்டம், கொல்லிமலையில் மூலிகைத் தோட்டமும், மருத்துவ மனை ஒன்றையும் ஏற்படுத்த முன் வந்துள்ளதாகத் தகவல் எதுவும் இல்லை. ஆனால் மாநில அரசு அங்கு ஒரு மூலிகைப்பண்ணை அமைக்க உத்தேசித்துள்ளது.

(ஆ) கொல்லிமலையில் வாளவந்தி நாடு என்ற இடத்தில் 75 ஏக்கர் நிலப் பரப்பில் மூலிகைப் பண்ணை அமைப்பதற்கான திட்ட அறிக்கையினைத் தயார் செய்து சேலம் மாவட்ட ஆட்சியாளர் அரசுக்கு அனுப்பியுள்ளார். அந்த அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைத் தோட்டத்தை கொல்லிமலைப் பகுதியில் அமைப்பதற்கான உத்தேசம் அரசுக்கு இருப்பதாகத் தெரிகிறது. அந்த மூலிகைத் தோட்டத்தை ராசிபுரம் பக்கத்தில் மலைக்கோயில் மேல் உள்ள மூலிகைகளையும் உபயோகப்படுத்திக் கொள்ளும்வகையில் அங்கே ஒரு மூலிகைப் பண்ணையையும், மருத்துவ மனையையும் அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைப் பண்ணை அமைக்க மலைப்பகுதியான இடமாக இருக்க வேண்டும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னவகையில் ராசிபுரத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்று ஆராயலாம், என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே தமிழகத்தில் வேறு ஏதாவது பகுதியில் மாநில அரசு மூலிகைப்பண்ணையை அமைப்பதாக உத்தேசம் உள்ளதா? உண்டு என்றால் அந்த இடங்கள் என்னென்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, 1979-80ஆம் ஆண்டிலே, 1. சேலம் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலைப் பகுதி; 2. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில், அதன் ஒரு பகுதியில்; 3. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருவரங்கம்; 4. மதுரை மாவட்டத்தில் உள்ள வைகை நீர்த்தேக்கத்தின் அருகில்; 5. மதுரை மாவட்டத்தின் பக்கத்தில் சிறுமலைக் குன்றம் ஆகிய இந்த ஐந்து இடங்களில் 1979-80ஆம் ஆண்டில் மூலிகைப் பண்ணைகள் வைக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டு ஆராய்ச்சிப் பணிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை இன்னும் விரிவுபடுத்த இந்தஆண்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பெறும்.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கில மருந்துகளின் விலைகள் அதிகமாக ஏறியிருப்பதினால், நம் தமிழ் மருத்துவத் துறையில் உள்ளபடி மூலிகைகளை அதிப்மாக உற்பத்தி செய்து எல்லா மாவட்டங்களிலும் மூலிகைக பண்ணைகளையும். மருத்துவ மனைகளையும் அமைத்து எல்லா மக்களுக்கும் இந்த மருத்துவமுறை உபயோகப்படும்படி செய்வதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகை பண்ணையைப் பொருந்தவரையில் அதை, எல்லா மாவட்டங்களிலும் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. ஏனென்றால் மூலிகைகள் நன்கு வளரக்கூடிய மலைப் பகுதிகளின்தான் மூலிகைப் பண்ணையை அமைக்க முடியும். அப்படிப்பட்ட இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த இடங்களில்தான் மூலிகைப்பண்ணை அமைப்பதற்கான திட்டம் போடப்பட்டிருக்கிறது. அப்படி அமைந்து அதை விரிவுபடுத்தும் பணியில் அதிகமான அளவில் மூலிகைகளை உற்பத்தி செய்து பயன்படுத்த திட்டங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். அதன் விளைவாக நிச்சயமாக தமிழ் வைத்தியத்தையும் விரிவுபடித்தும் வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டிய இடங்களில், சித்தர்கள் வாழ்ந்த பழனி மலை இல்லை. பழனி மலையில் ஏற்கெனவே அங்கிருக்கக்கூடிய ஆலயத்தின் சார்பில் மூலிகைப் பண்ணை வைத்திருக்கிறார்கள். அதையும் விரிவுபடுத்தி அங்கே ஒரு மூலிகை ஆராய்ச்சி பண்ணையையும் நிறுவ அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இது இல்லாமல் வேறு சில இடங்களில் இந்த மூலிகைப் பண்ணைகளை வைத்துப் பயன் பெறும் வகையில் விரிவுபடுத்தலாம் என்று அரசு ஆராய்ந்து வருகிறது. அப்படி வருகையில் பழனி மலையில்கூட விரிவு படுத்தும் திட்டத்தின் விளைவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் ஏற்கெனவே இருக்கும் பண்ணையையும் விரிவு படுத்த ஆராய வாய்ப்பு இருக்கும். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையின் அடிப்படையில் அரசு ஆராயும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லி மலையில் எந்தெந்த வகையான மூலிகைகள் கிடைக்கின்றன? என்னுடைய தொகுதியில் இராமாயண காலத்தில் சஞ்சீவி மூலிகை எனது தொகுதி அருகில் உள்ள சிறுமலையிலிருந்து எடுத்துச் சென்றதாகக் கூறுவார்கள். அப்படிப்பட்ட சஞ்சீவி மூலிகை அந்தப் பக்கத்தில் இருப்பதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இல்லை.

ஆட்டோரிக்ஷாவில் பயணிகள் எண்ணிக்கை.

*வினா எண். 45—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

ஆட்டோரிக்ஷாவில் 3 பேர் செல்வதற்கு அனுமதி வழங்க திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஆட்டோரிக்ஷாக்களில் 3 பயணிகளை ஏற்றிச் செல்ல அனுமதிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.